ஜி. ராமகிருஷ்ணன் பேட்டி

உலகறிந்த வேளாண் விஞ்ஞானி எம். எஸ் சுவாமிநாதன்,சர்வதேச அளவில் பல விருதுகளை பெற்றுள்ளார். அவர் வேளாண் விஞ்ஞானி மட்டுமல்ல உயர்ந்த சமூக பார்வை உடையவர்.

அவருடைய அப்பா ஒரு மருத்துவர் தன்னுடைய மகன் ஒரு மருத்துவராக வரவேண்டும் என கருதி மருத்துவம் படிக்க சேர்த்தார்.

மேற்குவங்கத்தில் 10 லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பஞ்சத்தால் இறந்த செய்தியை கேட்டறிந்த எம்.எஸ் சுவாமிநாதன் தன்னுடைய மருத்துவ படிப்பில் இருந்து விலகி  விவசாய பல்கலைக்கழகத்தில் சேர்ந்து வேளாண்மையில் முதுகலை பெற்று தன்னுடைய சமூக பார்வை மூலமாக சமூக பணியை தொடங்கினார்.

இந்தியாவில் உணவு பற்றாக்குறை பஞ்சம் வரக்கூடாது, மீண்டும் வங்க பஞ்சம் வரக்கூடாது என்ற நோக்கத்துடன் பசுமை புரட்சிக்கு வித்திட்டவர்.பசுமை புரட்சி மட்டுமல்ல அதற்கு பிறகும் கூட விவசாயிகள் பிரச்சனைகள் பற்றி மத்திய அரசு அமைத்த ஆணையத்திற்கு தலைவராக இருந்து செயல்பட்டு ஐந்து தொகுப்பு அறிக்கையை மத்திய அரசிடம் அளித்தார். உணவு உற்பத்தியை பெருக்குவது மட்டுமல்ல உணவு பஞ்சம் இந்தியாவுக்கு வரக்கூடாது.  விவசாயத்தை விவசாயிகளை பாதுகாப்பதற்காக மத்திய அரசுக்கு பரிந்துரைகள் செய்தார்.

அவர் உடல் வைத்திருக்கக் கூடிய இந்த இடமானது தொடர்ந்து ஆய்வு செய்வதற்கு ஒரு மகத்தான இடமாக செயல்படுகிறது.தன்னுடைய வாழ்நாளின் இறுதி நாள் வரையில் விவசாயிகள் விவசாயம் என அவர்களுடைய மேம்பாட்டிற்காக வித்திட்டவர்.

எம். எஸ் சுவாமிநாதன் உடைய மறைவு என்பது மிகப்பெரிய இழப்பு.அவரை இழந்து வாடும் அவருடைய குடும்பத்தினருக்கு  மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

மார்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி முன்னாள் மாநில பொது செயலாளர்